முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிவகங்கையில் 22.01.2025 அன்று நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக, சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சிலையினை திறந்து வைத்ததை முன்னிட்டு, நகரம்பட்டியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நிறுவப்பட்டுள்ள வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சிலைக்கு. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். உடன் வழக்கறிஞர் சிவ.கலைமணி அம்பலம், வாரிசுதாரர்கள் கே.செல்வராஜ், கண்ணதாசன் உட்பட பலர் உள்ளனர்.

ஒன்றிய அரசுக்குப் பாதிப்பென்றால் ஓடிவந்து குறுக்கே விழுந்து மடைமாற்றம் செய்வதே

எடப்பாடி பழனிசாமியின் கடமை என்பதை மீண்டும் நிரூபித்துள்ளார்!

நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, ஜன. 24 -

ஒன்றிய பாஜக அரசிற்கு ஒரு பாதிப்பென்றால் ஓடி வந்து குறுக்கே விழுந்து அதை மடைமாற்றம் செய்வதே எதிர்கட்சித்தலைவர் பழனிசாமியின் கடமை என்பதை மீண்டும் ஒரு முறை அவர் நிரூபித்துள்ளார் என்று நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவு வருமாறு:-

ஒன்றிய பாஜக அரசிற்கு ஒரு பாதிப்பென்றால் ஓடி வந்து குறுக்கே விழுந்து அதை மடைமாற்றம் செய்வதே எதிர்கட்சித்தலைவர் பழனிசாமி அவர்களின் கடமை என்பதை மீண்டும் ஒருமுறை அவர் நிரூபித்துள்ளார்.

100 நாள் வேலைத் திட்டம் என்ற மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்காக ஒதுக்க வேண்டிய நிதியை ஒதுக்காமல் ஏழை எளிய மக்களின் வயிற்றில் அடித்து வருகிறது ஒன்றிய பாஜக அரசு. இந்த நயவஞ்சக செயலை கண்டித்து முதலமைச்சர் @mkstalin அவர்கள், உடனடியாக தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய MGNREGS நிதியை விடுவிக்க வேண்டும் என வலியுறுத்திப் பொங்கலுக்கு முன்பே 13.01.2025 அன்று பிரதமருக்குக் கடிதம் எழுதி இருந்தார். இதை ஆதரித்து தமிழ் நாட்டு மக்களுக்காகக் குரல் கொடுத்திருக்க வேண்டிய பழனிசாமி, தனது குரலை அவதூறு பரப்ப மட்டுமே பயன்படுத்தி வருவது கண்டனத்திற்குரியது.

ஒரு பொறுப்பான எதிர்க்கட்சித் தலைவராக அவர் தமிழ்நாட்டுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பியிருக்க வேண்டுமல்லவா?

எதற்கெடுத்தாலும் செய்தித்தாளிலே படித்தேன், டிவியைப் பார்த்து தெரிந்து கொண்டேன் எனக் கூறும் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒன்றிய பாஜக அரசு நமக்கு நிதி ஒதுக்காதது பற்றித் தெரியாதா?.

புயல் வெள்ள நிவாரணம், கல்வி நிதி, 100 நாள் வேலைக்கான நிதி ஆகியவற்றை ஒதுக்காமல் தமிழ் நாட்டு மக்களை வாட்டி வதைத்துவரும் பாஜக அரசோடு மறைமுகக் கூட்டணி வைத்துக் கொண்டு, ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து ஒரு வார்த்தை யாவது பேச முடியாமல் வாய் மூடி இருப்பது ஏன்?

தனது இயலாமையை மறைக்கவே மக்களின் நலனில் அக்கறை கொண்டு அனுதினமும் செயல்பட்டு வரும் திராவிட மாடல் ஆட்சியின் மீது அவதூறு பரப்புவதையே அவர் வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

எல்.கணேசன் - மா.கோவிந்தராசனுக்குப் பாராட்டு!

தஞ்சையில் மொழிப்போர் ஈகியர் நாள் - பாராட்டு விழா!

புலவர் செந்தலை ந.கவுதமன் கருத்துரை! சு.கல்யாணசுந்தரம் எம்.பி. பாராட்டுரை!

தஞ்சை, ஜன. 24-

தஞ்சாவூர் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் திருவுருள் கல்லூரி வளாகம், பேராசிரியர் க. அன்பழகனார் அரங்கத்தில் மொழிப் போர் ஈகியர் நாள் மற்றும் பாராட்டு விழா இன்று (24.1.2025 - வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணியளவில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் மாணவர் பேரவைத் தலைவர் மு.பிரியதர்சன் வரவேற்புரையாற்றுகிறார்.

கல்லூரி முதல்வர் முனைவர் இரா.தமிழ்ச் செல்வம் தலைமை வகிக்கிறார்.

மேலாண்மை அறங்காவலர் முனைவர் மு.இளமுருகன், முனைவர் இரா.கலியபெருமாள் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இவ்விழாவில் கோவை தமிழ் இணையக் கல்விக் கழக மதிப்புரைஞர் புலவர் செந்தலை ந.கௌதமன் கருத்துரை வழங்குகிறார்.

இவ்விழாவில் மொழிப் போர் தளபதி எல்.கணேசன், மொழிப்போர் மறவர் மா.கோவிந்தராசன் ஆகியோருக்குப் பாராட்டு வழங்கப்படுகிறது.

விழாவில் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. கலந்துகொண்டு பாராட்டுரை வழங்குகிறார்.

இவ்விழாவில் கல்லூரி ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் பெருமளவில் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

தென்காசி நகர தி.மு.க. சார்பில்

மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக் கூட்டம்!

வே.ஜெயபாலன் - தமிழ் கா.அமுதரசன் - கண்ணன் - ராணி ஸ்ரீகுமார் - சாதிர் சிறப்புரை!

தென்காசி.ஜன.24.

தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி நகர தி.மு.க.சார்பில் மொழிப் போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நாளை (25.01.2025) மாலை 5 மணி அளவில் தென்காசி கொடிமரத்திடலில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ரமேஷ் தலைமையில் நகர அவைத் தலைவர் ராமகிருஷ்ணன் என்ற கிட்டு, பொருளாளர் சேக்பரித்,துணைச் செயலாளர்கள் ராம்துரை,பால்ராஜ், சூரியகலா,மாவட்ட பிரதிநிதிகள் பாலசுப்ரமணியன்,முகைதீன் பிச்சை, ரஹ்மத்துல்லா,சாகுல் ஹமீது ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஜாகிர் உசேன் வரவேற்புரையாற்றுகிறார்.

மாவட்ட பொறியாளர் அணி தலைவர் தங்கபாண்டியன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமைக் கழக பேச்சாளர் தமிழ் கா. அமுதரசன்,பூங்கா நகர் கண்ணன், தென்காசி ராணி ஸ்ரீ குமார் எம்.பி.நகர செயலாளர் சாதிர் ஆகியோர் பங்கேற்று உரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் மாவட்ட அவை தலைவர் சுந்தர மகாலிங்கம்,துணை செயலாளர்கள் தமிழ்ச்செல்வன், கென்னடி,கனிமொழி,பொருளாளர் ஷெரிப்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மா.செல்லத்துரை முத்துப் பாண்டி,சேசுராஜன்,ஷேக்தாவுது ஆறுமுகசாமி, பொதுக் குழு உறுப்பினர் கள் ரஹீம், அருள்,இராஜேஸ்வரன், ரவிச்சந்திரன், சாமித்துரை, சமுத்திரபாண்டி, கதிர்வேல் முருகன், தமிழ்ச்செல்வி,ஒன்றிய செயலாளர்கள் சீனித் துரை, அன்பழகன், அழகு சுந்தரம் உள்பட ஒன்றிய குழு தலைவர்கள்,சார்பு அணி அமைப்பாளர்கள்,நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொள்கி ன்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் வார்டு பிரதிநிதி பீர்முகமது நன்றியுரையாற்றுகிறார்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை தென்காசி நகர தி.மு.க.வினர் செய்துள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி
பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை

பூ.து.ந.க.எண்.பி2 / 057 / 2025 **இரட்டை உறை முறையில் மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் (பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை) அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம் - 12, பகுதி - 37, வார்டு - 165ல் உள்ள ஆக்கிரமிப்பில் இருந்த ஆதம்பாக்கம் திருவள்ளுவர் நகர் இணைப்பு சாலையில் அமைந்துள்ள திறந்தவெளி நிலத்தில் (OSR Land) புதிய பூங்கா அமைக்கும் பணி. (Two Cover System)

பணியின் மதிப்பு ரூ.106.48 இலட்சங்கள்

முன்வைப்பு தொகை :- மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **06.02.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **07.02.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 251 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி)**

மதுரை அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் நடத்திய திருக்குறள் ஒப்பித்தல் திறனறிதல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிக்கு மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் கோ. தளபதி வெற்றி சான்றிதழ் வழங்கினார்கள். புரட்சிப் பாவலர் மன்றத் தலைவர் பி. வரதராசன், இலக்கிய மன்றத் தலைவர் என்.எம். மாரி, செயலாளர் கே.வி. இராமகிருட்டிணன், துணைச் செயலாளர் கரு. அறுமுகம், துணைத் தலைவர் போடி காமராஜ், செயற்குழு உறுப்பினர்கள் ச.செல்வக்குமார், லெ. வெள்ளைச்சாமி, கே.கண்ணன், காஜா மற்றும் பலர் உள்ளனர்.

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு சங்கரன்கோவில் மேலரத வீதி கோகுலம் மண்டபத்தில் பொதுக்கூட்டம் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான், முன்னாள் அமைச்சர் தங்கவேலு, சீனிவாசன்,முத்துசெல்வி,டாக்டர் செண்பக விநாயகம்,லாலா சங்கர பாண்டியன்,அன்புமணி,பிரகாஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

பிப். 6, 7 தேதிகளில் முதல்வர் சுற்றுப்பயணம்!

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள்!

நெல்லை.ஜன.24.

நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

முதலமைச்சர்- கழகத் தலைவர் அவர்கள் பிப்ரவரி 6,7 ஆகிய தேதிகளில் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்வது குறித்து மாவட்ட பொறுப்பு அமைச்சர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பின்படி வருகின்ற 28.01.2025 செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு தூத்துக்குடி சாலை கே.டி.சி நகர் மாதா மாளிகை திருமண மண்டபத்தில் வைத்து நெல்லை மாவட்ட தி.மு.க சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் நெல்லை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் வார்டு, கிளை அமைப்புகளின் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள்

மாநில,மாவட்ட ,சார்பு அணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், நகர்ப்புற,ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகள், நிர்வாகிகள்,கழகத் தோழர்கள், பொது உறுப்பினர்கள்,திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இக்கூட்டத்தில்தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் 6, 7 ஆகிய தேதிகளில் திருநெல்வேலி மாவட்ட சுற்றுப்பயணம் வருகை கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர்

வாளுக்கு வேலி அம்பலம் சிலைக்கு மாலை!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அணிவித்து மரியாதை!

சிவகங்கை. ஜன.24 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சிவகங்கையில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக, சுதந்திரபோராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச் சிலையினை திறந்து வைத்ததை முன்னிட்டு, நகரம்பட்டியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நிறுவப்பட்டுள்ள வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுரு வச்சிலைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சிவகங்கையில் நேற்று முன்தினம் (22.01.2025) நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக, சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சிலையினை திறந்து வைத்ததை முன்னிட்டு, நகரம்பட்டியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நிறுவப்பட்டுள்ள வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சி லைக்கு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி தெரிவிக்கையில்,

சுதந்திரப் போராட்டத் தியாகிகளை போற்றிடும் வகையிலும், அவர்களை கௌரவிக்கும் பொருட்டும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதனடிப்படையில், சுதந்திரப் போராட்டத்தில் தனது பங்களிப்பையும், தியாகத்தையும் முழுமையாக அளித்த சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் புகழை உலகிற்கு பறைசாற்றுகின்ற வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தன் பொன்மொழிகளால் வரலாற்று சிறப்புகளை நூல்களாக பொறித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் தமிழகத்தில் சிறப்பான ஆட்சியினை நடத்திக் கொண்டிருக்கும், முதலமைச்சர் அவர்கள், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் புகழிற்கு வலுச்சேர்க்கின்ற வகையில், அன்னாரது பிறந்த நாளினை அரசு விழாவாக கொண்டாடிட உத்தரவிட்டதன் அடிப்படையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக அன்னாரது பிறந்த நாள், அரசு விழாவாக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மேலும், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களுக்கு சிறப்பு சேர்த்திடும் வகையில், அன்னாருக்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நகரம்பட்டியில் திருவுருவச்சிலை அமைக்கப்படுதற்கென முதலமைச்சர் அவர்களால் கடந்த 22.01.2024 அன்று காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டப்பட்டு, அப்பணிகள் இனிதே நிறைவுற்று, வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுரு வச்சிலை நேற்று முன்தினம் முதல மைச்சர் அவர்களால் வரலாற்று சிறப்புமிக்க சிவகங்கை மாவட்டத்திலேயே நேரில் வருகை புரிந்து கலந்து கொண்ட அரசு நிகழ்ச்சியில் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது மேலும் சிறப்பிற்கு ரியதாகும். இந்நிகழ்ச்சியில், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் சிலை அமையப் பெற்றுள்ள நகரம்பட்டியில் நானும் கலந்து கொண்டதில் பெருமிதம் கொள்கிறேன்.

மொழி, இனம், சுதந்திரம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, அதற்கென பாடுபட்டவர்களை கௌரவிக்கின்ற வகையிலும், அவர்களின் புகழை போற்றுகின்ற வகையிலும், அவர்களுக்கு நினைவகங்கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் திருவுருவச் சிலைகள் ஆகியவைகளை அமைத்து, எதிர்கால சந்ததியினர்கள் அறிந்து கொள்கின்ற வகையில், சிறப்பான நடவடிக்கைகளை முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு, தலைசிறந்த முதலமைச்சராக முதலமைச்சர் அவர்கள் திகழந்து வருகிறார்கள்.

இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், வழக்கறிஞர் சிவ. கலைமணி அம்பலம், வாரிசுதாரர்கள் கே.செல்வராஜ், கண்ணதாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி தெற்கு மாவட்டம் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பூ.ஆறுமுகச்சாமி அவர்களின் தந்தை பூல்தேவர் இயற்கை எய்தினார். அன்னாரது திருவுருவப் படத்திற்கு கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை மலர் தூவி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.உடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், சாமித்துரை,கனிமொழி, கென்னடி,பரமசிவஜயப்பன், அழகு தமிழ் சங்கர் ஆகியோர் உள்ளனர்.

தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிப்பட்டி கிழக்கு ஒன்றிய தொழிலாளர் அணி அமைப்பாளராக எஸ். கணேசன் நியமனம் செய்யப்பட்டதையொட்டி ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ. மகாராஜனைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார். உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கழக முன்னோடிகள் உடன் இருந்தனர்.